செ.வெ.எண். 59/ஜூன் **செய்தி வெளியீடு** நாள்: 27.06.2016

**மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 57 பயனாளிகளுக்கு ரூ. 4 இலட்சத்து 15 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**





தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (27.06.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இம்மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் கோரிக்கை மனுக்களாக மேல்நிலைத் தொட்டி அமைத்தல், புதிய ஆழ்துளை கிணறு, தகனமேடை, குடிநீர் வசதி, மின் வசதி, பட்டா வேண்டுதல், கல்வி உதவி தொகை, தரைமட்ட பாலம், மூன்று சக்கர வண்டி, ஓய்வூதிய தொகை, பசுமை வீடு, பட்டா மற்றும் சிட்டா பெயர் மாற்றம், வாரிசு சான்றிதழ், ஜாதி சான்றிதழ், பேருந்து வசதி, குழந்தைகள் நல மையம், சாலையில் உள்ள மரங்களை அகற்றி சாலைகளை அகலப்படுத்தி தர கோருதல், வேலைவாய்ப்பு, கல்வியில் படிப்பதற்கு உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம், சலவைப்பெட்டி மற்றும் வீட்டுமனை பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் மனுக்கள் என மொத்தம் 265 மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி உடனடி தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தினார்.

முன்னதாக மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரிய உறுப்பினர்கள் 17 பேருக்கு தொழில் தொடங்க மானிய உதவி தொகை தலா ரூ. 7500/- வீதம் ரூ. 1,27,500/-க்கான காசோலையையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ரூ. 84 ஆயிரத்து 410 மதிப்பில் 23 நபர்களுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்களையும், 5 நபருக்கு ரூ. 26 ஆயிரத்து 750/- மதிப்பில் மூன்று சக்கர வண்டியையும், முன்னாள் படை வீரர் நலத்துறையின் சார்பில் 8 நபர்களுக்கு திருமண உதவித் தொகை தலா ரூ. 20 ஆயிரம் வீதம் ரூ. 1 இலட்சத்து 60 ஆயிரத்திற்கான காசோலைகளையும், 2 பயனாளிகளுக்கு கண்கண்ணாடி மானியம் தலா ரூ. 3 ஆயிரம் வீதம் ரூ. 6 ஆயிரத்திற்கான காசோலையையும், 2 நபர்களுக்கு புதிய குடும்ப அட்டைகளையும் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ. சங்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு. பிச்சைராமன், தனி துணை ஆட்சியர்கள் செல்வி வள்ளி (ச.பா.தி), மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) திருமதி. பாப்பாத்தி, தனி துணை ஆட்சியர் (சிறப்புத்திட்டங்கள்) திரு. குப்புசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் திருமதி. இலாஹிஜான், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு. அமீர்பாஷா, முன்னோடி வங்கி மேலாளர் திரு. முத்தரசு, மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. மகிழ்நன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.